# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:228/பேரூ/2025**
**நாள் : 03.11.2025**

ம. மனோஜ் லியோ,
சீர்காழி,
மயிலாடுதுறை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, 2-வது தெரு, 9A/14, திருவள்ளுவர் நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. ம. மனோஜ் லியோ என்பவரது 26.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.06.2025 அன்று பெறப்பட்டு, 228/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, 2-வது தெரு, 9A/14, திருவள்ளுவர் நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. ம. மனோஜ் லியோ என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள தனது 26.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் தஞ்சாவூர் மாவட்டம், சவேரியார் கோயில் தெரு, வல்லம் பேரூராட்சியில் வசித்து வருகிறேன். தற்போது வேலை நிமித்தமாக தற்காலிகமாக மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்கு உட்பட்ட சவேரியார் கோயில் தெரு, அகிலாங்கரை மேட்டு தெரு, வடக்கு மேட்டு தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 800 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதி மத்தியில், மக்கள் பயன்படுத்தும் சாலை ஓரங்களில் அகிலாங்கரை மேட்டு தெருவில் திரு. பல்தசார் என்கிற பாபு என்பவராலும், வடக்கு மேட்டு தெருவில் திரு. ஆரோக்கியதாஸ் என்கிற ஆப்பை என்பவராலும், சவேரியார் கோவில் தெருவில் திரு. மெல்கின் என்பவராலும் மற்றும் வடக்கு மேட்டு தெருவில்

திரு. அசோக் என்பவராலும் நடத்தி வரும் நான்கு மாட்டிறைச்சி விற்பனையகங்கள் இப்பகுதிவாழ் மக்களுக்கு இடையூறாகவும், சுகாதாரமற்ற முறையிலும், உள்ளாட்சியில் பெற வேண்டிய எந்த வணிக உரிம அனுமதியும் பெறாமலும், உணவுப்பொருள் விற்பனை என்பதால் உணவு பாதுகாப்புத் துறையிடம் பெற வேண்டிய (FSSAI) உணவு பாதுகாப்பு உரிமம் எதுவும் பெறாமலும் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக சட்டவிரோதமாக விற்பனை செய்து வருகின்றனர்.

மேற்சொன்ன மாட்டிறைச்சி கடைகள் வைத்திருப்பவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த ஒருவரை ஒருவர் ரத்தபந்த உறவினர்கள் ஆவார்கள். வல்லம் பேரூராட்சியில் சட்டவிரோதமாக மாட்டு இறைச்சி விற்பனையகம் நடத்தி வரும் இவர்கள் ஒரு கடைக்கு தினமும் 1 மாடு முதல் 2 மாடுகளும், வார இறுதி நாட்களில் ஒரு கடைக்கு 3 மாடுகளுக்கு மேலாக வதை செய்து தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் மாட்டு இறைச்சி விநியோகித்து விற்பனை செய்கின்றனர். மறுபுறம் திருச்சி வரை பள்ளி, கல்லூரிகள் உட்பட பல இடங்களில் விற்பனை செய்து லட்சக்கணக்கில் வருவாய் ஈட்டி வருகின்றனர். அரசின் சட்ட விதிமுறை வழிகாட்டுதல்கள் எதையும் பின்பற்றுவதில்லை. அனைத்தையும் மீறி மாட்டிறைச்சி விற்பனைக்காக மாடுகளை மக்கள் குடியிருப்பு மத்தியிலேயே பொதுமக்கள் பார்வையில் படும்படி பொதுவெளியிலேயே வதை செய்கின்றனர். வதைக்கூடம் (slaughter house) செல்வதில்லை. பொதுமக்கள் குழந்தைகள் பார்வைப்படும் வகையில் பொதுவெளியிலேயே மாட்டின் தலை, அதன் கொழுப்பு விஸ்திரப்பு செய்து தொங்கவிடுவது, மாட்டின் தோலை பொது வெளியிலேயே காய வைப்பது போன்ற செயல்களை செய்கின்றனர்.

காலையில் பள்ளிகளுக்கு செல்லும் இப்பகுதி குழந்தைகள் இந்த விகாரமான காட்சிகளை கண்டு அஞ்சுகின்றனர். அது மட்டுமல்லாமல் இறைச்சிகளை விற்பனைக்கு ஏற்றி செல்ல பெரிய பெரிய கனரக வாகனங்களை வழியிலேயே நிறுத்தி, காலையில் பள்ளி கல்லூரி வாகனங்களுக்கு இடையூறாகவும், வேலைக்கு செல்லும் இப்பகுதி மக்களுக்கும் இடையூறு செய்கின்றனர். வல்லம் பேரூராட்சி நிர்வாகம் இப்பகுதி மக்களுக்கு குப்பை கொட்டுவதற்கு அமைத்து கொடுத்த குப்பைத் தொட்டியில் மாட்டிறைச்சி கழிவுகளை கொட்டி நிரப்புகின்றனர். மாட்டின் கழிவுகளை (சாணம், சிறுநீர் உட்பட) முறையாக அப்புறத்தப்படுத்தாமல் கடையின் அருகிலேயே முட்டாக கொட்டி வருகின்றனர். மக்கள் வசிக்கும் பகுதி முழுவதும் மாட்டின் எலும்புகள், குடல் போன்ற இறைச்சி கழிவுகளை கொட்டி விடுகின்றனர். இதனால் இறைச்சிகள் அழுகிய நிலையில் துர்நாற்றம் காற்றில் பரவி இந்த கிராமப் பகுதி முழுவதும் மோசமாக நாறுகிறது. தற்போது பெய்த மழையில் கூட நீரில் மாட்டிறைச்சி கழிவுகள் அடித்து செல்லப்பட்டு தெரு முழுவதும் பரவி அசுத்தமாகி நாறியது. இந்த மாட்டிறைச்சி கடைகளின் இதுபோன்ற செயல்களால் குடலை பிடுங்கும் அளவிற்கு தாங்க முடியாத துர்நாற்றம் ஏற்பட்டு இங்கு வாழமுடியாத சுற்றுச்சூழலில் உள்ளது. இப்பகுதி சுகாதாரம் சீர்கேடாகி வாந்தி, மயக்கம், காய்ச்சல், வயிற்றுப்போக்கு உட்பட பல நோய்களுக்கு உள்ளாகி பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அடிக்கடி நோய் வாய்ப்பட்டு அவதியுறுகின்றனர். மேலும் இறைச்சிக்காக எண்ணற்ற தெரு நாய்கள் இப்பகுதி முழுவதும் அச்சுறுத்தும் வகையில் சுற்றித் திரிகின்றன. தெரு நாய்களால் குழந்தைகள் உட்பட இதுவரை 42 பேர் நாய்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அப்புறப்படுத்தாத எலும்பு கழிவுகளால் மாமிசத்துக்காக வரும் மிருகங்கள் மற்றும் பறவைகளால் மாட்டு எலும்புகள் எங்கள் குடியிருப்பு பகுதி முழுவதும் பரவி கிடக்கின்றன.

இந்த மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் பணபலம், அரசியல் பலம், வல்லம் பேரூராட்சியில் உள்ளூர் செல்வாக்கு மிக்க நபர்களாக வலம் வருகின்றனர். வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர், நிர்வாக அதிகாரியிடமும் மிகவும் நெருக்கமான நபர்களாக உள்ளனர். இவர்கள் மாட்டு இறைச்சி

கடைகள் நடத்துவது மட்டுமல்லாமல், அடிதடி, கட்டப்பஞ்சாயத்து போன்ற குற்றச்செயல்களும் ஈடுபடக் கூடியவர்கள். அதில் இருவர் மீது காவல் நிலையத்தில் குற்றவழக்கு நிலுவையில் உள்ளது. ஊர் மக்கள் இப்பிரச்சினைகளை பற்றி கேட்டால் அவர்களை வெட்டுவேன், குத்திவிடுவேன் என்று பொதுமக்களுக்கு மிரட்டல் விடுகின்றனர். இதற்கு அஞ்சியே பல ஆண்டுகளாக பொதுமக்கள் இன்னல்களை பொறுத்துக்கொண்டனர். இப்பிரச்சனை தொடர்பாக வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் முதல் மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரை பலமுறை மனு கொடுத்தும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் 26.06.2023 அன்று தஞ்சாவூர் மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் வல்லம் பேரூராட்சிக்கு உட்பட்ட சவேரியார் கோயில் தெரு, அகிலாங்கரை மேட்டு தெரு, வடக்கு மேட்டு தெரு ஆகிய பகுதிகளில் இயங்கிய 4 மாட்டிறைச்சி கடைகளை ஆய்வு செய்தனர். ஆய்வின் முடிவில் அனுமதி பெறாமல் சுகாதாரமற்ற முறையில், இறைச்சிகளை விற்பனை செய்த அந்த மாட்டு இறைச்சி விற்பனையகங்களுக்கு அபராத தண்டம் விதித்து, எச்சரிக்கை செய்தனர். 15 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் உணவு பாதுகாப்பு துறையினர் 26.06.2023 அன்று ஆய்வு மேற்கொள்ளும் வரை எந்த உணவு பாதுகாப்பு உரிமம் (FSSAI) பெறாமலும் விற்பனை செய்து வந்துள்ளனர். அதுவும் அதில் 4 மாட்டிறைச்சி கடைகளில் இரண்டு கடையில் மட்டும் தற்போது உணவு பாதுகாப்பு உரிமம் பெறப்பட்டுள்ளது மீதமுள்ள 2 கடைகள் எந்த உரிமம் பெறாமல் இன்று வரை இயங்குகின்றன.

சட்டவிரோத மாட்டு இறைச்சி விற்பனையகங்களை அகற்றக்கோரி 22.09.2023 மற்றும் 18.02.2024 நாளிட்ட புகார் மனுக்கள் வல்லம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்டது. மனுக்களை பெற்றுக் கொண்ட செயல் அலுவலர் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஆனால், வல்லம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட 22.09.2023 நாளிட்ட மனுவின்படி அழுத்தம் கொடுத்த பிறகு நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக அவசர அவசரமாக, மேற்சொன்ன 4 மாட்டிறைச்சி விற்பனையாளர்களில் ஒருவரான பல்தசார் (எ) பாபு என்னும் மாட்டிறைச்சி விற்பனையாளருக்கு தொழில் உரிமத்தை 2024 ஜனவரி மாதம் அவசரமாக உடனே வழங்கி உள்ளார். வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேல் உள்ளாட்சி வணிக உரிமம் எதுவும் பெறாமல், லட்சக்கணக்கில் வியாபாரம் செய்து வல்லம் பேரூராட்சிக்கு வரி எதுவும் செலுத்தாமல் விற்பனை செய்து, தமிழக அரசுக்கு வரி வருவாய் இழப்பை ஏற்படுத்திய மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக வணிக உரிமம் சான்றிதழை வல்லம் செயல் அலுவலர் வழங்கியுள்ளார். இதன் மூலம் எந்த அளவிற்கு வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர் மாட்டு இறைச்சி விற்பனையாளர்களுக்கு சாதகமாக செயல்படுகிறார் என்பது தெள்ளத் தெளிவாக அப்பட்டமாக தெரிகிறது.

உள்ளாட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்காததை அடுத்து, அடுத்த கட்டமாக தஞ்சாவூர் தாலுகா வட்டாட்சியரிடம் 18.05.2024 அன்று மனு செய்து தஞ்சாவூர் தாலுக்கா வட்டாட்சியரிடமிருந்து சரக வருவாய் ஆய்வாளரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற பதில் கிடைக்கப்பெற்று இன்று வரை உரிய நடவடிக்கை எதுவும் இல்லை. பிறகு மீண்டும் 22.05.2024 அன்று வல்லம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனு செய்து திசை திருப்பும் வருவாய் ஆய்வாளரின் பதிலே தந்துள்ளார். 25.05.2024 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்து 26.06.2024 அன்று வல்லம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த குறிப்பாணையை அலட்சியப்படுத்தி நடவடிக்கை எதுவும் எடுக்காமல் கிடப்பில் போட்டார் வல்லம் பேரூராட்சி செயல் அலுவலர். இதுவரை நடவடிக்கை எதுவும் குறிப்பாணை மீது எடுக்கவில்லை.

தஞ்சாவூர் தாலுகா வட்டாட்சியரிடம் இது தொடர்பாக மீண்டும் மனு செய்து 25.10.2024 அன்று தஞ்சாவூர் வட்டாட்சியர் துணை அலுவலகத்திடமிருந்து சார் ஆய்வாளரின் நடவடிக்கையில் உள்ளது என்கிற பதில் மனு கிடைக்கப்பெற்றும் இன்று வரை அதற்கும் எந்த நடவடிக்கையும் இல்லை. கடந்த 04.04.2025 அன்று வல்லம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு முன்னெடுப்புக்குப் பிறகு வல்லம் பேரூராட்சி உட்பட்ட சவேரியார் கோயில் தெரு, அகிலாங்கரை மேட்டு தெரு, வடக்கு மேட்டு தெரு பொதுமக்கள் திரளாக சேர்ந்து மனுவில் கையொப்பமிட்டு, மாட்டு இறைச்சி விற்பனையாளர்கள் மீது அந்த விற்பனையாளர் மிரட்டலையும் தாண்டி சட்டப் போராட்டத்தின் மூலம் தீர்வு காண்போம் என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் சார்பாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் 19.05.2025 அன்று புகார் மனு கொடுக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்புகளில் பல மனுக்கள் கொடுக்கப்பட்டு எந்த நடவடிக்கையும் இல்லாததால் இந்த பகுதி பொதுமக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். பண பலம், அரசியல் பலம், அதிகாரிகளிடம் உள்ள செல்வாக்கு, மிகுந்து நெருக்கமாக இருக்கும் எதிர்தரப்பினரை எதிர்த்து எங்கள் பிரச்சனைகளை இதுவரை தீர்வுகாண முடியவில்லை.

இப்போது கடைசி நம்பிக்கையாக இங்கு தீர்வு கிடைக்கும் என்று நம்பி உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை நாடி வந்துள்ளோம். தாங்கள் இப்பிரச்சனையில் தலையீடு செய்து ஆண்டு கணக்கில் எங்களை அலைக்கழித்து மன உளைச்சல் உண்டாக்கிய சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மீது, எந்த பாரபட்சமும் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்கவும், மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் கும்பலுக்கு ஆதரவாகவும் பொதுமக்களுக்கு எதிராக செயல்படும் வல்லம் பேரூராட்சி செயல் அலுவலரை நிரந்தரமாக பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், பல ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் அடைந்து வரும் சொல்ல முடியாத பெரும் துயரத்தை அனுபவித்து, அங்கு வாழவே முடியாத சூழலில் உள்ள எங்களுக்கு அந்த மாட்டிறைச்சி விற்பனையகங்கள் அனைத்தையும் எங்கள் பகுதியிலிருந்து முற்றிலுமாக அப்புறப்படுத்தி சட்டவிரோத மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் மீது தங்கள் யுத்திக்கு ஏற்றவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தாழ்மையுடன் வேண்டி இம்மனுவை தங்களிடம் தாக்கல் செய்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. ராஜசேகர் என்பவர் தனது 29.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.221/2025/அ2–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்குட்பட்ட அகிழாங்கரை மேட்டுத் தெரு மற்றும் சவேரியார் கோவில் தெரு (பெரியார் நகர்) பகுதியில் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக திரு. மணிகண்டன், பெரியார் நகர், வல்லம் என்பவரால் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களுக்கு மக்கள் குறைதீர்க்கும் மனு ZOHO செயலி இணைய வழி வரப்பெற்ற மனுவிற்கு 30.05.2025 நாளிட்ட வல்லம் பேரூராட்சி அறிவிப்பு கடிதத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும்

வகையில் செயல்படும் மாட்டிறைச்சி விற்பனை கடையை அப்புறப்படுத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. மனுதாரர் திரு. மனோஜ் லியோ த/பெ. ஞா. மரிய பிரான்சீஸ், சீர்காழி என்பவரின் புகார் மனுவிற்கு 21.07.2025 அன்று நேரடி ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சவேரியார் கோவில் தெருவில் அமைந்துள்ள திரு. மெல்கின் என்பவரது (கடை 1), பாக்கியசாமி மகன் திரு. அசோக் என்பவரது (கடை 2), மற்றும் திரு. ஆரோக்கியதாஸ் என்கிற ஆப்பை (அகிழாங்கரை மேட்டுத் தெரு) என்பவரது மாட்டிறைச்சி விற்பனை கடையினை உடன் அகற்றிட தெரிவிக்கப்பட்டது. மேலும் வல்லம் பள்ளிவாசல் தர்காவிற்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள திரு. பல்தசார் என்கின்ற பாபு என்பவரின் மாட்டிறைச்சி விற்பனை கடைக்கு திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாட்டிறைச்சி விற்பனையினை சுகாதாரமான முறையில் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. மேலும் 23.07.2025 மற்றும் 26.07.2025 அன்று மாட்டிறைச்சி விற்பனை கடையினை அகற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் சவேரியார் கோவில் தெரு மற்றும் பெரியார் நகர் பகுதி பொதுமக்களிடமிருந்து, மாட்டிறைச்சி விற்பனை செய்பவர்களால் பிழைப்பதற்கு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக, 28.07.2025 நாளிட்ட கோரிக்கை மனு வரப்பெற்றது. மேலும் வல்லம் பேரூராட்சிக்குட்பட்ட சவேரியார் கோவில் தெரு (பெரியார் நகர்) பகுதியில் அமைந்திருந்த மாட்டிறைச்சி விற்பனை கடைகள் அப்புறப்படுத்த அறிவுறுத்தியதன் பேரில், திரு. மெல்கின் என்பவரது மாட்டிறைச்சி கடை மட்டும் அவர்களது சொந்த செலவில், கடையானது அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள கடைகள் உடன் அப்புறப்படுத்திடவும் மாட்டிறைச்சி விற்பனை செய்பவர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மாட்டிறைச்சி விற்பனை செய்திட மாற்று இடம் அமைத்து கொடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. ம. மனோஜ் லியோ மற்றும் எதிர்மனுதாரரான வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 29.08.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.08.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. ம. மனோஜ் லியோ என்பவர் 29.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

➢ "தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட

(i) அகிலாங்கரை மேட்டு தெருவில்
  (1) திரு பல்தசார் (எ) பாபு
  (2) ஆரோக்கியதாஸ் (எ) ஆப்பை

(ii) சவேரியார் கோவில் தெருவில் திரு. மெல்கின் மற்றும்

(iii) வடக்கு மேட்டு தெருவில் அசோக் ஆகிய 4 நபர்களும் தலா 1 மாட்டிறைச்சி கடையினை பேரூராட்சியில் எவ்வித வணிக உரிம அனுமதியும் மற்றும் உணவு பாதுகாப்புத் துறையிடமிருந்தும் (FSSAI) உரிமம் இல்லாமல் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக சுகாதாரமற்ற முறையில் மாட்டிறைச்சி விற்பனை செய்து வருகின்றனர்.

- மாட்டிறைச்சி கடைகளிலேயே பொதுவெளியில் தினமும் மாடுகளை வதம் செய்து, அதன் கழிவுகளை இப்பகுதி மக்கள் பயன்படுத்தும் குப்பை தொட்டிகளில் கொட்டுவதால், அழுகிய இறைச்சியால் பொது மக்களுக்கு, சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகின்றது.

- இறைச்சியை தேடி தெருக்களில் நாய்கள் மற்றும் பாம்புகள் சுற்றி திரிகின்றன. இதுவரை 42 நபர்கள் நாய்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

- மேற்காணும் 4 கடைகளை 26.06.2023 அன்று உணவு பாதுகாப்புத் துறை ஆய்வு செய்ததன் தொடர்ச்சியாக, திரு. பல்தசார் (எ) பாபு என்பவர் மட்டும் FSSAI-ன் உரிமம் பெற்றுள்ளார். மீதமுள்ள 3 கடை உரிமையாளர்கள் உரிமம் பெறாமல் நடத்தி வருகின்றனர். இதனால் பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

- இதற்கிடையில் திரு. மெல்கின் என்பவர் நடத்தி வந்த மாட்டிறைச்சி கடையினை 23.07.2025 அன்று அப்புறப்படுத்தி மீண்டும் ஒரு வாரம் கழித்து அதே இடத்தில் மாட்டிறைச்சி கடையினை நடத்தி வருகிறார்.

- மாடுகளை வதைக் கூடத்தில் (Slaughter House) வதம் செய்யாமல் பொது வெளியில் விதிகளை மீறி மாடுகளை வதம் செய்வதால் இத்தெருக்களில் செல்வதற்கு பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். மேலும் இப்பகுதிவாழ் மக்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

- இம்முறைமன்ற நடுவத்தில் இன்றைய நேரடி விசாரணையின்போது நான் புகாராக தெரிவிக்கும் 4 மாட்டிறைச்சி கடைகளை அப்புறப்படுத்தி பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் வதைக் கூடத்துடன் மாட்டிறைச்சி கடைகளை தனியாக அமைப்பதற்கு வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி மன்றத்தில் 26.08.2025 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்கின்ற தீர்மானத்தை படித்துப் பார்த்தேன். பேரூராட்சி மன்றத்தில் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட இடம் கூட பொதுமக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியாகும் என்பதால் மீண்டும் இதே பிரச்சனைகள் ஏற்படும். எனவே மன்றத் தீர்மானத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்கிறேன்.

- 15 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித வணிக உரிமமும் பெறாமல் மாட்டிறைச்சி கடைகளை நடத்தி வந்ததால், அரசுக்கு வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே 4 மாட்டிறைச்சி கடைகளுக்கும் அபராதம் விதிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே சுகாதார சீர்கேடும் விளைவிக்கும் மேற்காணும் மாட்டிறைச்சி விற்பனையகங்களை இப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்த ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. ராஜசேகர் என்பவர் **29.08.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- மனுதாரர் திரு. ம. மனோஜ் லியோ என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் தெரிவிக்கும் முன்னரே, திரு. மணிகண்டன் என்பவர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறை தீர்க்கும் மனு அளித்ததன் அடிப்படையில், **30.05.2025** நாளிட்ட அறிவிப்பு மூலம் சுகாதாரமற்ற முறையில் இயங்கும் மாட்டிறைச்சி கடைகளை அப்புறப்படுத்திட கடை உரிமையாளர்களுக்கு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- தற்போது மனுதாரர் புகாராக தெரிவிக்கும் **4** மாட்டிறைச்சி விற்பனை கடைகளில் **2** கடைகள் புறம்போக்கு இடத்திலும், **1** கடை பட்டா இடத்திலும் மற்றும் **1** கடை பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் இயங்கி வருகிறது. எனவே புறம்போக்கு இடத்திலுள்ள கடையும் பட்டா இடத்தில் உள்ள கடையும் பேரூராட்சி செயல் அலுவலராகியஎன்னால் **21.07.2025** அன்று கள ஆய்வு செய்யப்பட்டு, அக்கடைகளை உடன் அகற்றிட தெரிவிக்கப்பட்டு அறிவிப்புகள் வழங்கப்பட்டன.

- இந்நிலையில் திரு. மெல்கின் என்பவர் நடத்தி வந்த மாட்டிறைச்சி கடையானது அவரது சொந்த செலவில் அப்புறப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து மீண்டும் அதே இடத்தில் கடை இயங்கி வருகிறது.

- மாட்டிறைச்சி கடை உரிமையாளர்கள் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. கடை உரிமையாளரின் வாழ்வாதாரத்தினை கருத்திற்கொண்டும், பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மாட்டிறைச்சி விற்பனை செய்திட இக்கடைகளை அப்புறப்படுத்தி மாற்று இடம் அமைத்து கொடுப்பதற்கு பள்ளிவாசல் டிரஸ்டிடம் வல்லம் பேரூராட்சிக்குட்பட்ட சவேரியார் கோவில் மேட்டுத் தெருவில் உள்ள **3** மாட்டிறைச்சி விற்பனை கடைகளை நடத்த இடம் ஒதுக்கித் தர கோரி பேரூராட்சி மன்றத்தின் சார்பாக தீர்மானம் எண். **607/26.08.2025** அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடைகளை மேற்கண்ட இடத்திற்கு மாற்றிட வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தி கடைகளை அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் திரு. ம. மனோஜ் லியோ என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. ம. மனோஜ் லியோ என்பவர் தனது 26.06.2025 நாளிட்ட முறையீட்டு மனு மற்றும் வாக்குமூலத்தில் தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட அகிலாங்கரை மேட்டு தெருவில் (1) திரு பல்தசார் (எ) பாபு (2) திரு. ஆரோக்கியதாஸ் (எ) ஆப்பை என்பவர்கள் சவேரியார் கோவில் தெருவில் திரு. மெல்கின் என்பவர் மற்றும் வடக்கு மேட்டு தெருவில் திரு. அசோக்குமார் என்பவர் ஆகிய 4 நபர்களும் தலா 1 மாட்டிறைச்சி கடையினை பேரூராட்சியில் எவ்வித வணிக உரிம அனுமதியும் மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்திடமிருந்தும் (Food Safety and Standard Authority of India) (FSSAI) உரிமம் பெறாமல் கடந்த 15 ஆண்டுகளாக சுகாதாரமற்ற முறையில் மாட்டிறைச்சி விற்பனை செய்து வருகின்றனர் எனவும் பொது இடத்திலேயே மாடுகளை வதை செய்து, கழிவுகளை குப்பை தொட்டில் மற்றும் தெருவில் வீசுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது எனவும், தெரு நாய்கள் இறைச்சிக்காக தெருவில் சுற்றித் திரிவதால் இதுவரை 42 நபர்களை நாய்கள் கடித்துள்ளது எனவும் உரிமம் இல்லாமல் கடைகள் நடத்துவதால் பேரூராட்சிக்கு நிதியிழப்பும் ஏற்படுகிறது எனவும் புகாராக தெரிவித்து, அக்கடைகளை அகற்ற கோரியிருப்பது தெரிய வருகின்றது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் 4 இறைச்சி கடைகளில் 1 கடையானது பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்திலும், 2 கடைகள் புறம்போக்கு இடத்திலும் மற்றொரு கடையானது பட்டா இடத்திலும் செயல்பட்டு வந்த நிலையில், பேரூராட்சி செயல் அலுவலரால் 21.07.2025 அன்று கள ஆய்வு செய்து அக்கடைகளை அகற்றிட உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரரான வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரர் சுகாதாரமற்ற முறையில் மாட்டு இறைச்சி கடைகள் நடத்தப்படுவதாக புகார் தெரிவித்த பிறகே, பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் பேரூராட்சிக்குட்பட்ட இடத்தில் இதுபோன்ற சுகாதாரமற்ற கடைகளை அவ்வப்போது உரிய ஆய்வினை மேற்கொள்ளாமல் இருப்பதும் மற்றும் ஆடு, மாடுகள் வதை கூடத்தினை அமைப்பது குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருப்பதும் பேரூராட்சி செயல் அலுவலரின் பணியின் மெத்தன போக்கு மற்றும் அலட்சியத்தை காட்டுகிறது. அவரது இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டித்து துறை நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்கிறது.

மேலும், மாட்டிறைச்சி கடை உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு, பொது சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் 4 கடைகளில் 1 கடையானது பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள நிலையில் மற்ற 3 கடைகளும் பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் அமைக்க இடத்தினை ஒதுக்கித் தர பள்ளிவாசல் டிரஸ்டியும் கோரப்பட்டு, பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் (தீர்மான எண். 607/28.06.2025) நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தி கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி புகாருக்குள்ளான 4 மாட்டு இறைச்சி கடைகளையும் அப்புறப்படுத்திட வருவாய் கோட்டாட்சியர் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் அமைத்திட ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை

மேற்கொண்டு அதன் அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்க வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ம. மனோஜ் லியோ,
9A/14. திருவள்ளுவர் நகர்,
2-வது தெரு, சீர்காழி - 609 111
மயிலாடுதுறை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

6/11/25

06/11/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032